www.padippakam.com

# சகோதரப் படுகொலைகளும் தமிழ்த் துரோகிகளும்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE, FRANCE

EPRLF

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும்

பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

படிப்பகம்

www.padippakam.com

# சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும்

1988 கார்த்திகை

ரூபா: 5

பிரச்சார வெளியீட்டுப் பிரிவு
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

87 புரட்டாதியில் ''ஈழப்போராட்டத்தில் சகோதரப் படுகொலைகளும் சயனைட் தற்கொலைகளும்'' என்னும் தலைப்பில் கே சி என் அவர்களால் எழுதப்பட்டு நாம் வெளியிட்ட நூலின் திருத்திய வடிவமே ''சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும்'' என்கிற இந்நூல்.

ஈழப்போராட்டத்தைச் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தியதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகம் மன்னிக்கப்படமுடியாததுவும் இலகுவில் மறக்கப்படமுடியாததுவுமாகும்.

கே சி என் அவர்களே குறிப்பிடுவதுபோல் 'இந்தக் கட்டுரையானது சகோதரப் படுகொலைகள் பற்றிய ஒரு சித்திரத்தை மட்டுமே தரும் முயற்சியாகும் என்பதோடு, எதிர்காலத்தில் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கும் தூண்டுகோலாகவும், ஒரு சிறிய வழிகாட்டியாகவுமிருக்கலாம்'

1974 இலிருந்து 1987 இலங்கை—இந்திய ஒப்பந்தம் வரையிலான சகோதரப்படுகொலை நிகழ்வுகள் குறித்தே இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இடம்பெற்ற சகோதரப் படுகொலைகளையும், புலிகள் — புளொட் கும்பல்களின் துரோகத் தனங்களையும் எடுத்துக் கொண்டால் அது இன்னொரு நூலாக விரிவடையலாம்.

வரலாறு உண்மைகளை அம்பலத்திற்குக் கொண்டு வந்தே தீரும் என்பதில் நாம் நம்பிக்கையுள்ளவர்கள். துரோகத்திரைகள் கிழித்தெறியப்பட்டு, சரியான சக்திகள் அரங்கிலேற்றப்படுவதை வரலாறு உறுதிப்படுத்தும் என்பதில் நாம் நம்பிக்கை கொள்ளுவோம்!

— பிரச்சார வெளியீட்டுப் பிரிவு —
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



படிப்பகம்

www.padippakam.com

சகோதரப் படுகொலை என்னும் வகையில்
கொல்லப்பட்ட 1500க்கும் மேற்பட்ட
போராளிகளுக்கு...

படிப்பகம்

www.padippakam.com

# சகோதரப் படுகொலைகளால் ஒரு தேசத் துரோகம்

மெது மெதுவாகத் தன் காலடிகளை உறுதியாகப் பதித்த படி முன்னேறிக் கொண்டிருந்த ஈழ விடுதலைப் போராட்டமானது 1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ந் திகதியோடு ஓர் நெருக்கடிக்கு உள்ளானது.

திசைமாறியது.

பலவீனமடைந்தது!

மிகப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவோடு எழுச்சி பெற்று நின்ற ஒரு போராட்டம் சீரழிந்து—குட்டிச்சுவராகி—முற்றுப் புள்ளியானது.

ஈழவிடுதலைப் போராட்டத்தை இந்த நிலைமைக்கு உள்ளாக்கிய பெருமைக்குரியவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள்.

1986ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ந் திகதியன்றுதான் புலிகள் தமது ''வீரம்'' மிகுந்தபோரை தமிழீழ விடுதலைஇயக்கத்தினருக்கு எதிராகத் தொடுத்தார்கள்.
மே மாதம் 6ந் திகதிவரை அவர்கள் நடத்திய யுத்தத்தில் TELO வின் தலைவர் சிறி சபாரத்தினம் உட்பட அவ்வமைப்பின் 250 க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொன்றொழித்து TELO வை முற்றாக அழித்துவிட்டதாக மார்தட்டிக்கொண்டார்கள்.

'தமிழீழவிடுதலை' என்ற இலட்சியத்தாகத்துடன் போராட்டத்தில் இணைந்து கொண்ட எத்தனை இளைஞர்களை உயிரோடு கொளுத்தி சாகடித்தார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

எத்தனையோ இளைஞர்கள் என்னவென்று தெரிவதற்கு முன்னரே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

TELO வின் ஆதரவாளர்கள் எத்தனைபேர் கொல்லப்பட்டார்கள்?

எவ்வளவு உடைமைகள் சேதமாக்கப்பட்டன என்பதை இங்கு விளக்கவேண்டிய அவசியமில்லை.

இந்தக் கொடூரமான துரோகம் எதற்காக? என்ன நோக்கங்களுக்காக நடந்தது? என்பதை தமிழ்மக்கள் நன்கு அறிவார்கள்.

இதேவேளை இந்தக் கொடூரத்தைப் பாராட்டி புலிகளுக்கு கொக்காகோலாவும் கோழி இறைச்சியும் வழங்கிய சில நபர்களையும் வரலாறு மறந்துவிடாது.
TELO மீது நடத்திய யுத்தத்திற்குப் புலிகள் காட்டிய காரணம்' சமூகவிரோதிகள், இந்தியக் கைக்கூலிகள்! என்பதுதான்.

இந்தப் பட்டங்களின் அடிப்படையில் புலிகள் நடத்தும் சகோதரப் படுகொலைகள் இன்னமும் ஓயவில்லை,

இந்த முத்திரைகளைக் குத்தியபடி போராளிகளையும் பொதுமக்களையும் கொலைசெய்து திரிவதில் LTTEயினர் ஒரு விசர்பிடித்த நோயாளிகள் கூட்டமாகவே ஆகிவிட்டனர்.

இவ்வாறான பட்டங்களைச் சூட்டித்தான் ஹட்லரும் யூத தர்களையும், கம்யூனிஸ்ட்டுக்களையும், தொழிற்சங்கவாதிகளையும் தனது எதேச்சதிகாரத்திற்கு எதிரான, தான் சந்தேகப்பட்ட எல்லோரையும் கொன்று குவித்தான்.

ஹட்லரின் வரலாறு இரண்டாம் உலக யுத்தத்தோடு முடிவடைந்து விடவில்லை,

உலகின் பல்வேறு பாகங்களில் இன்னும் எத்தனையோ ஹட்லர்கள் உயிர் வாழ்கிறார்கள்.

ஹிட்லரிசத்தின் ஒரு குட்டிதான் புலியிசம் என்பதை தமிழ்மக்கள் சரியாப் புரிந்துகொள்வது அவசியயமாகும்.

இந்திய—இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்கு முன்னர் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மொத்தமாக சுமார் 3000ம் போராளிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதில் சிறிலங்கா அரச படைகளினால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 1500க்கும் சற்றுக் குறைவானதே.

மிகுதி 1500 பேரும் எப்படிக் கொல்லப்பட்டார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

ஈழப் போராளிகள் என அணிதிரண்டு நின்றவர்களே— ஆயுதம் தரித்து நின்றவர்களே கொன்றொழித்தனர்.

சகோதரப் படுகொலை என்னும் வகையில் கொல்லப்பட்டோரை இருவகை[illegible]கலாம்.

ஒன்று தத்தமது அமைப்புக்குள்ளேயே உள்ள சகோதர உறுப்பினர்கள் மீதான இரகசியப் படுகொலைகள்;

மற்றது, ஏனைய சகோதர அமைப்புக்களின் உறுப்பினர்களைப் படுகொலை செய்தமை.

ஏனைய சகோதர அமைப்புக்களைப் படுகொலை செய்வதில் புலிகள் எவ்வளவு வீரத்தனம் மிக்கவர்களாக விளங்கினார்களோ அதே போல தமது அமைப்பின் உறுப்பினர்களையே படுகொலை செய்வதில் PLOT காரர்கள் அசகாயசூரர்களாக விளங்கினார்கள்.

ஈழப் போராட்டத்தில் நிகழ்ந்த சகோதரப் படுகொலைகள் பற்றியும் சகோதரப்படுகொலைகளால் ஈழப் போராட்டத்திற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலை பற்றியும் ஒரு விரிவான முழுமையான ஆய்வு தேவைப்படுகின்றது.

அவ்வாறான ஓர் ஆய்வு என்பது சுலபமான காரியமல்ல என்பது உண்மையேயாயினும், கடுமையான முயற்சிகள் எடுத்தாயினும் மேற்கொள்ளப்படுவது அவசியம் என்பதை மறுக்க முடியாது.

இந்தக் கட்டுரையானது சகோதரப்படுகொலைகள் பற்றிய ஒரு சித்திரத்தை மட்டுமே தரும் முயற்சியாகும் என்பதோடு—

எதிர்காலத்தில் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்குத் தூண்டுகோலாகவும் ஒரு சிறிய வழிகாட்டியாகவுமிருக்கலாம்.

## சகோதரப் படுகொலைகளின் ஆரம்பம்!

14 ஆண்டுகளுக்கு முன்னால்—

அதாவது 1974ம் ஆண்டு மார்ச் மாதம்தான் முதலாவது சகோதரப்படுகொலை ஈழவிடுதலைப் போராட்டத்தில் இடம் பெற்றது.

செட்டி என்றழைக்கப்பட்ட தனபாலசிங்கம், கண்ணாடி என்றழைக்கப்பட்ட பத்மநாதனை,



படிப்பகம்

www.padippakam.com

அனுராதபுரச் சிறைச் சாலையில் இருந்து தப்பிவரும் வழியில் பூநகரிக் காட்டுக்குள் ஒன்றாக நித்திரையாயிருக்கையில் கொடூரமாகக் கொலை செய்த நிகழ்ச்சிதான் அந்த முதலாவது சம்பவம்.

யார் அந்தச் செட்டி? வரலாற்றில் ஆர்வம் மிக்கவர்கள் அவனைப்பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

தனிப்பட்டரீதியில் செட்டி என்ற அந்தநபர் ஓர் ஒழுக்கக் கேடானவன்—சமூக விரோதி.

ஆனால் 1972 ம் ஆண்டுக் காலகட்டத்தில் சிறீலங்கா அரசுக்கு எதிராக ஈழப் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட தமிழ் மாணவர் பேரவையினர் செட்டியிடம் காணப்பட்ட சில திறமைகளைத் தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்துமுகமாக—

அவனையும் தம்முடைய நடவடிக்கைகளோடு இணைத்துக் கொண்டனர்.

இதனாலும் அவனும் 'விடுதலைப் போராளி' ஆனான்.

போராட்டத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டாலும் செட்டியின் நடத்தையில். குணாம்சத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை,

1972ம் ஆண்டு தமிழ் மாணவர் பேரவையினர் மேற்கொண்ட; கொக்குவில் கிராமசபைத் தலைவர் குமாரகுலசிங்கம் (SLFP அரசாங்கத்தின் ஆதரவாளர்) கொலை நிகழ்ச்சியில் ஈடுபடுத்தப்பட்ட நால்வரில் செட்டியும், கண்ணாடியும் உள்ளடங்குவர்,

1973ம் ஆண்டு மார்ச் மாதம் அரசகாவற் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்மாணவர்பேரவை உறுப்பினர்களில் செட்டி, கண்ணாடி ஆகியோரும் உள்ளடங்குவர்.

குமாரகுலசிங்கம் கொலைவழக்கில் செட்டி, கண்ணாடி ஆகியோரோடு சம்பந்தப்பட்ட சிவராஜா, இரட்ணகுமார் ஆகிய நால்வரும் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 1974ம்ஆண்டு மார்ச் மாதம் தப்பி வந்தனர். வரும்வழியிலேயே பூநகரியில் வைத்துக் கண்ணாடி கொலை செய்யப்பட்டார்.

செட்டி அத்தோடு தன்னுடைய பெயர் சொல்லும் வரலாற்றை முடித்துக் கொள்ளவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

சிறையிலிருந்து தப்பிவந்து சிலமாதங்களில் தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கப் பணத்தை வழிமறித்துக் கொள்ளையடித்தான்.

பிரபாகரன் போன்றவர்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டான்—

தமிழ்ப் புதிய புலிகள் (TNT) என தனது குழுவுக்குப் பெயரும் சூட்டிக் கொண்டான்.

## செட்டியின் சிஷ்யன் - வாரிசு!

இன்று பிரபாகரன் குழுவினர் (LTTE) தமது வெளியீடுகளில் —பிரச்சாரங்களில் கூறுவது போல புலிகள் அமைப்பு என்பது 1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுமல்ல — அது பிரபாகரனால் தோற்றுவிக்கப்பட்டதுமல்ல. மாறாக, 1974ம்ஆண்டு புரட்டாதி மாதம் கல்வியங்காட்டைச் சேர்ந்த செட்டி என்றழைக்கப்பட்ட தனபாலசிங்கனினால் ஆரம்பிக்கப்பட்ட குழுதான் புலிகள்! — செட்டியே புலிகளின் ஆரம்பகர்த்தா — ஆரம்பத்தலைவன்.

அன்றைக்குச் செட்டியின் சிஷ்யர்கள் பலரில் பிரபாகரனும் ஒரு நபர் என்றாலும் அக்குழுவிலும் சரி, சிந்தனையிலும் சரி, நடைமுறையிலும் சரி, செட்டியின் வாரிசு என்பது மறுக்கமுடியாத உண்மையே.

இங்கு ஏன் செட்டிக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது என இதை வாசிப்பவர்கள் நினைக்கக் கூடும்.

செட்டியைப் பற்றித் தெரிந்து கொள்வது ஈழவரலாற்றில் பல விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

செட்டியைத் தலைவனாகக் கொண்டு ஒரு போராளிகள் குழு ஒன்று தோற்றம் பெறக் கூடிய வகையில் ஈழ விடுதலைப் போராட்டமானது அரசியல் ரீதியில் எவ்வளவு தூரம் வரண்டு போயிருந்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

கருத்து முரண்பாடுகளை ஜீரணித்துக் கொள்ள முடியாமை,

முரண்பாடான கருத்தைக் கொண்டவர்களை எதிரிகளாகக் கருதுகின்றமை,

தனது தலைமை அதிகாரத்தை நிலை நாட்டிக் கொள்வதில் வெறி,

தமது இயக்க உறுப்பினர்கள் மீதே சந்தேகம் கொள்ளுதல்......



படிப்பகம்

www.padippakam.com

என்பவற்றிற்காகச் சகோதரப் போராளிகளைக் கொலை செய்யும் பாரம்பரியம் செட்டியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விடயமே.

செட்டியின் சிஷ்யனாகிய பிரபாகரனும் பிரபாகரனின் சிஷ்யர்களுமே இந்த அரக்கத்தனமான கொலைகாரப் பாரம்பரியத்தில் — இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் வரும்வரை— 650க்கு மேற்பட்ட ஈழப் போராளிகளைக் கொன்று குவித்த 'பெருமை'க்குரியவர்கள் ஆவர்.

1979ம் ஆண்டு பிரபாகரன், ''பற்றிக்''என்றழைக்கப்பட்ட சுதுமலை பற்குணம் என்ற புலி அமைப்பின் போராளியை நித்திரைப் பாயில் ஒன்றாகப் படுத்துத் தூங்குவது போல் நடித்துக் கொண்டிருந்து விட்டுத் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்த சம்பவமே ஈழவிடுதலைப் போராட்டத்தில் இடம்பெற்ற இரண்டாவது சகோதரப் படுகொலை.

அதே ஆண்டு மட்டக்களப்பு ''மைக்கல்'' அதே பிரபாகரனால் படுகொலை செய்யப்பட்டது மூன்றாவது சம்பவம்.

அதேயாண்டு (1978) ''கழுகுப்படை'' என்ற பெயரில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் செயற்பட்டு வந்த இன்னொரு குழுவினருக்குள் உரும்பிராயைச் சேர்ந்த குலசேகரன் படுகொலை செய்யப்பட்டு ஏரிக்குள் வீசப்பட்டுக்கிடந்தார்.

மேற்குறிப்பிட்ட நான்கு சம்பவங்களும் அந்தந்தக் குழுவினருக்குள் நடந்த சகோதரப் படுகொலை வகையைச் சேர்ந்தவையாகும்.

## பழிக்குப் பழி!

ஒரு குழுவினர் மற்றொரு குழுவைச் சேர்ந்த போராளிகளைக் கொலை செய்யும் பாரம்பரியமானது—

1982 ம் ஆண்டு தை மாதம் பிரபாகரன் குழுவினரால் உமா மகேஸ்வரன் குழுவைச் சேர்ந்த சுந்தரம் என்றழைக்கப்பட்ட சிவசண்முகமூர்த்தி என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தோடு தான் ஒரு குழுவினர் மற்றொரு குழுவைச் சேர்ந்த போராளிகளைக்கொலை செய்யும் பாரம்பரியம் ஆரம்பமானது.

சுந்தரம் படுகொலை செய்யப்பட்டதற்குப் பழிக்குப் பழி வாங்கும் முகமாக சில நாட்களுக்குள்ளேயே, பிரபாகரன் குழுவினரோடு மிக நெருக்கமாக இருந்த இறைகுமாரன், உமைகு



படிப்பகம்

www.padippakam.com

மாரன் ஆகிய இரு போராளிகளும் உமாமகேஸ்வரன் குழுவினரால் மிகவும் கொடூரத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

சுந்தரம், இறைகுமாரன், உமைகுமாரன் படுகொலைகளோடுதான், ஈழப்போராட்டத்தில் போராளிக் குழுக்களிடையே—

நம்பிக்கையீனங்களும்,

போட்டா போட்டிகளும்,

விரோத உணர்வுகளும்,

ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்ட அந்நிய உணர்வுகளும்,

ஒன்றை ஒன்று கண்டு அச்சம் கொள்ளும் நிலைமைகளும்,

ஒன்றுக்கொன்று ஒளித்துச் செயற்படும் போக்குகளும்,

ஒன்றையொன்று கீழ்மைப்படுத்தும் முயற்சிகளும்,

ஒன்றிடமிருந்து ஒன்று தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும் தேவைகளும் கட்டாயமாயின.

## ஒட்ட முடியாமற்போன வெடிப்பு!

இந்தச் சகோதரப் படுகொலைகளின் விளைவுகளிற் பிரதானமானது என்னவெனில்,

ஈழவிடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட குழுக்கள், சிறீலங்கா அரசின் கொடூரமான கெடுபிடிகள், கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்கு முறைகள் நிகழ்ந்து கொண்டிருந்த வேளையிலும்கூட —

தமக்கிடையேயுள்ள கருத்து முரண்பாடுகளை, சந்தேகங்களை பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமரசம் கண்டு ஐக்கியப்பட்டுப் போராடுவதற்கான நிலைமை ஏற்படுவதை இந்த சகோதரப் படுகொலைக் கலாச்சாரமே தடுத்து நிறுத்தியது.

ஈழவிடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி, பின்னடையச் செய்ததில் சகோதரப் படுகொலை முக்கிய பாத்திரம் வகிக்கின்றது.

அந்தவகையில் இந்த சகோதரப்படுகொலைப் பாரம்பரியமும், அதனை மேற்கொண்ட நபர்களும், குழுக்களும் ஈழமக்களுக்கு ஆற்றியுள்ள துரோகம் மறக்கப்பட முடியாத ஒன்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஈழப்போராட்ட அமைப்புக்களிடையே நிலவும்''ஒற்றுமையீனம்''பற்றிக் கவலைப் படுபவர்கள் ஒவ்வொருவரும் சகோதரப் படுகொலைப் பாரம்பரியத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

ஒருபுறம் சகோதரப் படுகொலைகளுக்குத் தூபம் போடுவதும்,

அதற்கு ஆதரவளிப்பதுவும்,

சகோதரப் போராளிகளைக் கொலை செய்து குவித்து விட்டு மார் தட்டுகின்ற திறமையையும் கொலைகாரத்தனமான வீரத்தையும் பாராட்டுவதுவும்;

மறுபுறம் அதே ஆட்கள்—

ஈழப்போராட்ட அமைப்புகளிடையே ஒற்றுமையைக் கோரிக்குரல் கொடுப்பதும், அதற்காகக் கண்ணீர் வடிப்பதுவும் சுய முரண்பாடான நிலைப்பாடுகளாகும்.

**சகோதரப் படுகொலைகளைத், தயவு தாட்சண்யமின்றிக் கண்டிப்பவர்கள் மட்டுமே— அதற்கு எதிராகப் போராடுபவர்கள் மட்டுமே ஒற்றுமையைக் கோரிக் குரல் கொடுக்கும் தகுதியைப் பெற்றவர்கள் ஆவர்.**

## வெலிக்கடைப் படுகொலையின் ஓலம் ஓயும் முன்னர் ஒபரோய்தேவன் படுகொலை!

1983ம் ஆண்டுக்குப் பின்னரே சகோதரப்படுகொலைகள் நூற்றுக் கணக்கில் குவிந்தன.

1983ம் ஆண்டு ஆடி மாதம் சிறிலங்கா அரசு இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டு ஒரு சில நாட்களுக்குள்ளேயே ''தமிழீழ விடுதலை இராணுவம்'' என்ற ஒரு போராளிக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டு வந்த மாறன் என்றும் ஒபரோய் தேவன் என்றும் அழைக்கப்பட்ட போராளி பிரபாகரன் குழுவினால் படுகொலை செய்யப்பட்டார்.

1980ம் ஆண்டு தமிழீழ விடுதலை இயக்கத்தில்(TELO) பிரபாகரனும் தேவனும் ஒன்றாக உறுப்பினர்களாக இருந்த நேரத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் உருவான பகைமையின் காரணமாகவே—



படிப்பகம்

பிரபாகரன் தருணம் பார்த்திருந்து தேவனைப் படுகொலை செய்தமை நிகழ்ந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பிரபாகரனுக்கும் TELO வுக்கும் என்ன சம்பந்தம் என்று பலர் சிந்திக்கக் கூடும்.

1979ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து புலிகள் அமைப்பிலிருந்து விலகிய பிரபாகரன் தங்கத்துரை குழுவில் சேர்ந்து கொண்டார்.

1980இல் தங்கத்துரை குட்டிமணி ஆகியோர் தமது குழுவுக்குத் தமிழீழ விடுதலை இயக்கம்(TELO)எனப் பெயரிட்டுக் கொண்டனர்.

பிரபாகரனைத் தொடர்ந்து பிரபாகரனின் சகாக்களான சீலன்(சார்ள்ஸ் அன்ரனி),மாத்தயா சிறீ போன்றோரும் TELO வில்சேர்ந்து கொண்டனர்.

தங்கத்துரை குட்டிமணி ஆகியோருடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி பிரபாகரன் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைக் கலைத்தனர்.

அவ்வறிவிப்பைப் பத்திரிகைகளுக்கு வெளியிடுவது பற்றி ஆலோசிக்கையில் பாலசிங்கம் தலையிட்டுக் காலதாமதப்படுத்தும்படி கேட்டுக்கொண்டார்.

இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் கலைப்பு பற்றிய அறிவிப்பு பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படவில்லை.

சிறிது காலங்களுக்குள் தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் உட்பட TELOவின் முக்கியமான தலைவர்கள் அரச படைகளினால் கைதுசெய்யப்பட்டனர்.

சிறையில் இருந்த தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் சிறிசபாரத்தினத்தை TELOவின் தற்காலிக தலைவராக நியமித்தனர்.

இதுவே சிறிசபாரத்தினம்—பிரபாகரன் பகைமையின் ஆரம்ப காரணமாகும்.

சிறிசபாரத்தினத்தின் தலைமையை ஜீரணித்துக்கொள்ளத் தயாராக இல்லாத பிரபாகரன்,
தங்கத்துரை—குட்டிமணி ஆகியோர் சிறையில் இருந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தன்து சகாக்களுடன் தமிழீழ விடுதலை இயக்கத்தினுள் ஒரு தனிக்குழுவாகச் செயற்பட்டுவந்தனர்.

1981ம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து படிப்படியாக விலகி மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள்என்ற பெயருடன் இயங்க ஆரம்பித்தனர்.

www.padippakam.com

## நாலு ஆண்டுகளில் உட்கொலை 500 க்கு மேல்!

1983ம் ஆண்டு ஆடி இனப்படுகொலையைத் தொடர்ந்து மொத்தத்தில் ஈழப் போராட்டமும், ஈழவிடுதலை அமைப்புக் களும் பல்வேறு வகையிலும் ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற ரீதியில் வீங்கிப் பெருத்தன—தலைக்கனம் உட்பட.

1984ம்ஆண்டு ஆரம்பத்திற்கும் 1987 ல் இந்திய—இலங்கை சமாதான ஒப்பந்தம் உருவாகிய காலகட்டத்திற்கும் இடைப் பட்ட சுமார் மூன்றரை ஆண்டு கால இடைவெளிக்குள் ஈழப் போராட்டக் குழுக்களுக்கு உள்ளே சொந்த இயக்க உறுப்பினர் கள் மீது நடத்தப்பட்ட இரகசிய சகோதரப் படுகொலைகளின் எண்ணிக்கை 500க்கு மேற்பட்டதாகும்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் சுமார் 250 பேரைக் கொன்று முடித்த ''பெருமை'' தமிழீழ மக்கள் விடுதலை கழ கத்தை(PLOT)ச் சேரும். சுமார் 100 பேருக்கு மேல் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்குள் மாண்டு போனார்கள்.

இரகசிய சகோதரப் படுகொலைகளைப் பற்றி ஒரு விவ ரண பூர்வமான அறிவைப் பெறுவதற்கு 'புதியதோர் உலகம்' என்னும்தமிழ் நாவல் ஒரு வரலாற்றுச் சான்றாகும்.

இரகசிய சகோதரப் படுகொலைகள் தொடர்பாக ஓர் ஆவணக்காப்பகம் (DOCUMENTATION CENTRE) அவசி யமாகும் அவ்வாறான ஒரு முயற்சியின் மூலமே அது தொடர் பான விபரங்களை அறிவது சாத்தியமாகும்.

## படுகொலைகள் மரணதண்டனைகள் அல்ல!

தத்தமது அமைப்புக்குள் இரகசியமாக மேற்கொண்ட படு கொலைகளுக்கு விளக்கம் தரும் அந்தக் குழுக்கள், இராணுவக் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை நிலைநாட்டும் பொருட்டு வழங்கப்பட்ட தண்டனைகளே தவிர அவை கொலைகள் அல்ல எனத் தம்மால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை நியாயப் படுத்துகின்றன.

இராணுவக்கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை நிலைநாட்டுவ தற்குக்கூட, எந்தவொரு இராணுவத்திலும் சில அடிப்படை யான ஒழுங்கு முறைகள் இருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரனாகி விடமுடியாது. இங்கு தூக்கு மேடைக்குண்டர்கள் நீதிபதிகளாகச் செயற்பட்டிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

ஸ்தாபன ஜனநாயகம் சிறிதுமற்ற இந்தக் குழுக்கள் நடத்தி முடித்துள்ள இரகசிய கொலைகள் அத்தனையும் காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளே தவிர அவை வரன்முறைப்படி நீதி ஒழுங்கின்படி வழங்கப்பட்ட மரண தண்டனைகள் அல்ல.

## உரிமைப் போராட்டத்தில் அடிமைச் சீட்டு!

இந்தக் கொலைகாரக் குழுக்களிலிருந்து இதுவரை வெளியேறியவர்கள்—விட்டோடியவர்களில் பெரும்பாலானோர் தாம் இருந்த குழுவின் அரசியல் இலக்குத் தொடர்பாகவோ—அரசியல் பாதை தொடர்பாகவோ கொண்ட கருத்து முரண்பாடுகளினால் வெளியேறியவர்கள் என்றில்லை.

மாறாக, அக்குழுக்களினுள் நிலவிய—நிலவுகின்ற எதேச்சாதிகாரப் படுகொலைகள்,

சித்திரவதைகள் காரணமாகவே வெளியேறியிருக்கின்றனர்.

இவ்வாறு வெளியேறியவர்கள் தாங்கள் ஏற்கனவே உறுப்பினராயிருந்த குழுவின் கொலைகாரத்தனத்திற்குப் பயந்து ஒளிந்து வாழ வேண்டியவர்களாக உள்ளனர்.

இவ்வாறானவர்கள் தமது அரசியல் இலக்கு அடிப்படையிலான வாழ்க்கையை இழந்தவர்களாக மட்டுமல்ல—

தனிப்பட்ட வாழ்க்கையைக்கூட மேற்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.

இந்தக் குழுக்கள் தம்மிலிருந்து வெளியேறியவர்களின் அடிப்படை அரசியல், ஜனநாயக உரிமைகளை மறுத்தே வந்திருக்கின்றன.

வெளியேறியவர்கள் வேறொரு இயக்கத்தில் இணைந்து கொள்வதற்கோ அல்லது புதியதொரு அமைப்பை உருவாக்கிச் செயற்படுவதற்கோ அனுமதிப்பதில்லை.

இக்குழுக்களின் தலைமைகள் தமது குழுவில் ஒரு போராளி வந்து இணைந்து கொண்டால், அந்தப் போராளி ஆயுட்கால அடிமைச்சீட்டு எழுதிக் கொடுத்து விட்டதாகவே கருதுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

சிறீலங்கா அரசின் ஜனநாயக மறுப்புக் கொள்கையின் விளைவாகவே ஈழப்போராட்டம் உருவானது—தமிழ் இளைஞர்கள் ஈழப் போராளிகள் ஆயினார்கள் என்பதை இக்கொலைகாரக் குழுக்களின் தலைமைகள் கவனத்திற் கொள்ளத் தவறிவிடுகின்றன.

## ஈழப் பெற்றோர்களின் மனமாற்றம்!

1983, 84, 85 ம் ஆண்டுகளில் தமது பிள்ளைகள் ஏதாவதொரு ஈழ அமைப்பில் சேர்ந்து போராளியாக இருந்ததைக் கண்டு ஈழத்தின் பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.

எதிரிப்படைகளுடன் சண்டை செய்து தமது பிள்ளைகள் களத்தில் இறக்கும் செய்தி கேட்டுக் கவலைப் படாமல் பெருமைப் பட்டுக்கொண்டார்கள்.

ஆனால், புலிகள் ஏனைய போராட்ட அமைப்புகளின் மீது யுத்தம் நடத்தத் தொடங்கியதைத் தொடர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எப்படியாவது வற்புறுத்தி— ஏதாவது தந்திரம் பண்ணி—எவ்வாறாவது சிரமப்பட்டு—இலட்சக்கணக்கில் செலவு செய்தாயினும் வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவதிலேயே அவர்கள் அக்கறைகாட்டத் தொடங்கினர்.

இதன் விளைவாக இன்று பல ஆயிரக்கணக்கான போராளிகள் ஐரோப்பிய நகர வீதிகளில் அகதிகள் முத்திரையோடு திரிகின்றனர்.

இதேபோல தமிழ் நாட்டு மக்கள் ஈழப்போராட்டத்திற்கு அளித்த மாபெரும் ஆதரவு பின்னர் ஒரு கட்டத்தில் திடீரென வீழ்ச்சியடைந்தமைக்கும் இந்தச் சகோதரப் படுகொலைகளே பிரதான காரணமாகும்.

## புலிகளே - வழிகாட்டிகள், முதலிடம் பெறுபவர்கள்:

ஸ்தாபனத்திற்குள் இரகசியப் படுகொலைகளை ஆரம்பித்த பெருமையும், அவ்வாறான ஒரு நோய் ஏனைய சில குழுக்கள் மத்தியில் பரவுவதற்கு காரணமாயிருந்த 'சிறப்பும்' புலிகளுக்கே உரியது.

புலிகள் என்பதை ஒரு குழுவாக மட்டுமல்ல; ஈழப்போராட்டத்தில் புலியிசம் என்ற அம்சத்தைச் சற்று விரிவாகவும்



படிப்பகம்

www.padippakam.com

அதன் ஆபத்தான தன்மைகளைச் சற்று தெளிவாகவும் விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

தலைமை வெறி, பண வெறி, புகழ் வெறி, ஹெரோயின் பவுடர் கடத்தல் (போதை வஸ்து கடத்தல்), ஆட்கடத்தல் மூலம் பணம் பறித்தல் தொடக்கம் போராளிகளைப் படுகொலை செய்தல்வரை ஈழப்போராட்டத்தில் புலிகளே வழிகாட்டிகளாகத் திகழ்கிறார்கள்.

அவற்றை அதிக அளவில் செய்து முடித்த வகையில் முதலிடம் பெறுபவர்களும் அவர்களே.

ஆனால் இங்கு வேடிக்கைக்கு உரிய விடயம் என்னவென்றால் புலிகள் மற்றவர்களைப் பார்த்து சமூகவிரோதிகள் என்று சொல்வதுதான்!

## ஈ. பி. ஆர். எல். எவ். பின் பெருமை:

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் ஸ்தாபனத்திற்குள் உள்ளும் புறமும் எவ்வளவோ நெருக்கடிகளைச் சந்தித்த அமைப்புத்தான்.

500க்கும் மேற்பட்ட தமது சொந்தக் குழு உறுப்பினர்களை இந்த உலகின் கண்களுக்குத் தெரியாத வகையில் தீர்த்துக் கட்டிவிட்ட ஈழக் குழுக்களின் மத்தியில்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் செயற்பட்டது — செயற்பட்டுவருகின்றது.

ஆனால் எந்தவொரு சொந்தத் தோழனுக்கும் துப்பாக்கியை நீட்டிய— கொலை செய்ய முயற்சித்த வரலாறு என்ற ஒன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு கிடையாது என்பதை மிகவும் தற்பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

அதற்குக் காரணம் EPRLF ஆனது தனது சொந்த உறுப்பினர்கள் விடயத்திலும், பொதுவாக போராளிகள் விடயத்திலும் (எந்தக்குழுவைச் சேர்ந்தவர்களாயினும்) ஸ்தாபனத்தின் நலனையும் மீறியவகையில் மக்கள் நேசப்போக்கைக் கடைப்பிடித்து வந்தமையே ஆகும்.

இவ்வாறான அணுகுமுறையே EPRLFஐக் குறிப்பிடத்தக்க அளவு பலவீனப்படுத்தியது எனினும்—

கொலைகாரக் குழுக்களின் மத்தியில் நடமாடும் ஒரு புரட்சிகர ஜனநாயக ஸ்தாபனமானது. கோடு போட்டு நடப்பது மிகச் சிரமமாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பத்தோடு பதினொன்று என ஆகிவிடக்கூடாது என்பதில் EPRLF கூடுதலான கவனம் செலுத்தியது.

EPRLF ஸ்தாபனத்தின் விட்டுக் கொடுப்பான போக்கை EPRLFக்கு உள்ளே இருந்த கட்டாக்காலிகளும் அடங்காப்பிடாரிகளும் தமது சுயநல நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ள முனைந்த வேளையிலும் கூட

EPRLFஇன் தலைமையானது மிகவும் ஜனநாயக பூர்வமாகவும் மனிதாபிமானமாகவும் நடந்து கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

EPRLFக்குள் கட்டாக்காலித்தனமாகவும் அடங்காப்பிடாரித்தனமாகவும் நடந்துகொண்ட நபர்கள் ஸ்தாபனத்தில் இருந்து வெளியேற்றப்பட்டாலும் அவர்கள் இன்றும் தமது அடிப்படை அரசியல் உரிமையை இழந்து போகாமல் செயற்படும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தவகைகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டுமே நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்.

## புலிகளின் தாகம் - சகோதர இரத்தம்

தத்தமது குழுவிற்குள் படுகொலை செய்தல் பற்றிய விடயம் ஒரு புறமிருக்க,

ஏனைய சகோதர அமைப்புக்களின் போராளிகளைப் படுகொலை செய்யும் விடயத்தை எடுத்துக் கொள்வோம்,

ஈழப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்திலேயே தமது தனி அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில், ஏனைய விடுதலை அமைப்புக்களை எந்த வழியிலாயினும் முற்றாக அழித்தொழித்து விடுவது புலிகள் குழுவினரின் அமைப்புரீதியான கொள்கையாக 1981ம் ஆண்டிலிருந்தே இருந்து வந்திருக்கின்றது.

1982ம் ஆண்டு உமாமகேஸ்வரன் குழுவைச் சேர்ந்த சுந்தரத்தைப் புலிகள் படுகொலை செய்தது மட்டுமல்லாது உமாமகேஸ்வரன் குழுவின் முக்கியமான நபர்கள் அனைவரையும் கொலைசெய்து, அக்குழுவை முற்றாக அழித்து விடுவது எனத் திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கினர்.

ஆனால்—



படிப்பகம்

www.padippakam.com

பழிக்குப் பழியென உமாமகேஸ்வரன் குழுவினர் உமைகுமாரன், இறைகுமாரன் ஆகிய புலிகள் உறுப்பினர்களைப் படுகொலை செய்தவுடன் பிரபாகரன் குழுவினர் தற்காலிகமாகத் தமது அழித்தொழிப்புத் திட்டத்தைக் கைவிட்டனர்.

சிறிசபாரத்தினத்தை ஏதாவதொரு வழியில் சிக்க வைத்துக் கொலை செய்துவிடுவதன் மூலம்—

தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சீர்குலைத்து, இல்லாத தாக்கிவிடலாம் என்ற எண்ணத்துடன் 1985ம் ஆண்டு வைகாசி மாதம் பிரபாகரன் குழு ஒரு சதி முயற்சியில் சிறிசபாரத்தினத்திற்கு எதிராக இறங்கியது.

ஆனாலும் அது கையும் மெய்யுமாகப் பிடிப்பட்டு தோல்வி கண்டது.

அந்த விடயத்தில் தம்முடன் ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்திற்காக ரெலோ இயக்க உறுப்பினரான மனோ மாஸ்டரை பிரபாகரன் குழுவினர் நயவஞ்சகமாகப் படுகொலை செய்தனர்.

## சி.ஐ.ஏ.யின் வலைப்பின்னலுக்குள் தமிழினத் துரோகிகள்!

ஆரம்ப காலத்தில், பிரபாகரன் குழுவினர் கொலைகாரத் திட்டங்கள் அவ்வளவு வெற்றிகரமாக அமைய முடியாமற்போனதாயினும் பிந்தியகாலங்களில் பிரபாகரன் குழுவினருக்கு, அவர்களது அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான சாதக நிலைமைகள் ஏற்பட்டன.

CIA, MOSSAD, சிறீலங்கா உளவுப்படை ஆகியோர் ஈழவிடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்கான தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தமிழ் நாட்டின் பொலிஸ் உயரதிகாரி மோகன் தாஸ், இந்திய ரோ(RAW) அதிகாரி உன்னிகிருஷ்ணன் ஆகியோரைத் தமது துணையாட்களாக மாற்றிக் கொண்டனர்.

மோகன்தாஸும், உன்னிகிருஷ்ணனும் MGRஇனூடாகத் தமது திட்டங்களை மேற்கொண்டனர். MGR இனூடாகப் பிரபாகரனுக்கு வழங்கப்பட்ட பணத்தின் அளவு 38 கோடி ருபா(இந்திய ருபாயில்).

சிறிசபாரத்தினம் கலைஞர் கருணாநிதிக்குச் சார்பானஆள் என MGR கருதும் நிலையை உருவாக்கி, பிரபாகரனுக்கு இவ்வளவு பெருந்தொகையான பணத்தைத் தேடிக் கொடுத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

அதுமட்டுமல்லாது—

வெளிநாடுகளில் ஆயுதக் கொள்வனவு,

தொடர்பு சாதனங்கள் கொள்வனவு,

அவற்றைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு சிங்கப்பூரில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தமை,

தமிழ் நாட்டில் பொலிஸ் அமைப்பு முழுவதையும் புலிகளுக்குச் சார்பாகப் பயன்படுத்தியமை,

ஏனைய ஈழ அமைப்புகளுக்கு எல்லாவகையான நெருக்கடிகளையும் ஏற்படுத்தியமை......

ஆகிய அனைத்தையும் மோகன்தாஸ்—உன்னிகிருஷ்ணன் கூட்டே சாதித்துக் கொடுத்தது.

மோகன்தாஸ் புலிகளின் பாதுகாவலனாக (PATRON) முழுமூச்சுடன் செயற்பட்டமையே புலிகளுக்கு சகலவிடயங்களும் சாதகமாக அமைந்தமைக்குப் பிரதானமான காரணமாகும்.

மோகன்தாஸ் அவ்வளவு அக்கறையுடன் தானாகச் செயற்படவில்லை என்பது தெளிவாகும்.

ஈழவிடுதலை இயக்கம் மொத்தத்தில் பலவீனப்படுவதனால் அது இந்தியாவின் நோக்கங்களைப் பாதித்தது என்றில்லை.

ஈழ விடுதலை இயக்கங்கள் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருந்த நேரத்தில் இந்திய அரசாங்க அதிகாரிகள் நினைத்த விதமாக பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வை மிகச் சுலபமாகக் கண்டுவிட முடியவில்லை;

எனவே, ஈழவிடுதலை இயக்கங்கள் பலவீனப்படுவது என்பது தமக்குப் பாதகமான விடயமாகக் கருதியிருக்க வேண்டியதில்லை.

எனவே, மோகன்தாஸ் — உன்னிகிருஷ்ணன் கூட்டினால் மேற்கொள்ளப்பட்ட சதிவேலைகளை அவர்கள் கண்டும்காணாமல் விட்டிருக்கிறார்கள் என்றே கொள்ள வேண்டும்.

எனினும்—

தமது பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் CIA, MOSSAD உடன் கொண்டிருக்கும் தொடர்பு தொடர்பாக ஒரு கட்டத்திற்கு மேல் இந்திய அரசாங்கத்தினால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை,

அதனால் உன்னிகிருஷ்ணன் இப்போது சிறையில் இருக்கிறார்; மேகன்தாஸ் இப்போது பழைய பதவியில் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

இதைவிட தமிழ்நாட்டில் உள்ள சாக்கடை அரசியல்வாதிகளான வீரமணி, நெடுமாறன் கும்பலும், குத்துக்கரணமடிக்கும் கருணாநிதியின் அரசியலும் பிரபாகரனின் கொலைகாரத் தனத்திற்கு சாதகமாகவே அமைந்தன.

## 'புளொட்'டின் பங்கு

1983ம் ஆண்டு பிற்பகுதியில் கோப்பாய் ராஜ்மோகனை இரகசியமாகப் படுகொலை செய்ததில் தொடங்கிய 'புளொட்'டின் படுகொலையானது மிக பெருமளவில் பெருந்தொகையான சொந்த அமைப்பின் உறுப்பினர்களையே படுகொலை செய்து குவித்தது.

1983 ஆடிப் படுகொலைக் காலத்தில் ஒபரோய் தேவன் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தேவனின் அமைப்பாகிய தமிழீழ விடுதலை இராணுவத்தைச் (TELA) சேர்ந்த உறுப்பினர்கள் ஏதாவதொரு 'பெரிய' அமைப்பின் துணையைத்தேடி அலைந்தனர்.

அவர்களுக்கு PLOT புகலிடம் அளித்தது. TELA ஒரு தனி இயக்கம் என 'புளொட்' அங்கீகாரம் அளித்தது.

PLOTஇன் இந்தப் 'பெரிய மனிதத் தன்மை'யால் குளிர்ந்த TELA உறுப்பினர்கள் மேலும் மேலும் PLOT உடன் நெருக்கமாகிக் கொண்டனர்.

1984ம் ஆண்டு நடுப்பகுதியோடு TELAவை விழுங்கும் வேலையை ஆரம்பித்தது. பெயரளவில் TELAவை அங்கீகரித்துக் கொண்டு அதனைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் தனது நோக்கங்களுக்காகப் பாவிப்பதற்கு புளொட் ஆரம்பித்தது.

இதனால் TELA உறுப்பினர்களுக்கும் PLOTக்கும் இடையில் முரண்பாடு தொடங்கியது.

TELA தனது ஜனநாயக உரிமையை நிலை நாட்ட முற்பட்டதன் விளைவு—

1984ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும், 1985ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் PLOTகாரர்கள் TELAவைச் சேர்ந்த போராளிகளை—அக்குழுவின் தலைவர்கள் சேகர், கூச் உட்பட—படுகொலை செய்து குவிக்கத் தொடங்கினர்.

கொல்லப்பட்ட TELA உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபதுக்கு மேல் என கணிப்பிடப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

PLOT அமைப்புக்குள் 250க்கு மேற்பட்ட போராளிகள் மிகக்கொடூரமான முறையில், PLOTஇன் சித்திரவதை முகாம்களிலும் மற்றும் இரகசியமான முறையிலும் படுகொலை செய்யப்பட்டபோதிலும், அது மக்கள் மத்தியில் ஒரு பெரிய அளவில் அச்சத்தையோ கேள்விக்குறிகளையோ ஏற்படுத்தவில்லை.

அது PLOTஇன் உட்பிரச்சினை என்று மக்கள் அமைதியாக இருந்து விட்டாலும் கூட—

PLOTஇன் உள்ளே இருந்த அந்தக் கொடூரங்களுக்கு எதிராராகப் PLOTஇன் உள்ளேயே பலர் போராடினர், பலர் வெளியேறினர்...... அவர்கள் மீதும் 'புளொட் தனது கொடூரமான கொலைகாரத்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இக்கொடூரங்களின் காரணமாக PLOTஇலிருந்து வெளியேறியவர்களே 'தீப்பொறி குழு' என ஒரு குழுவாயினர். இவர்களே PLOTக்குள் நடந்த கொடூரங்களையும் வெளிக் கொணர்ந்தனர்.

1983, 84ஆம் ஆண்டு காலகட்டத்தில் PLOTக்குப் பணம் சேர்ப்பதற்கும் பிரச்சாரம் செய்வதற்கும் மிகவும் பயன்பட்ட முன்னாள் காந்திய இயக்கத் தலைவர் டேவிட் அவர்கள் PLOTஐ விட்டு வெளியேறி அதன் உண்மைகள் பலவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வந்தார்.

அவர் மீதும் பல கொலை முயற்சிகளை PLOT கட்டவிழ்த்தது. அவர் இன்றும் PLOTஇன் கொலைகாரத் தனத்துக்குப் பயந்து தலை மறைவாகவே வாழ்கிறார்.

'புளொட்' குழுவினர் புலிகளைச் சேர்ந்த ஆறுபேரை 1985ம் ஆண்டு தையில் சுழிபுரத்தில் வைத்துப் படுகொலை செய்த சம்பவத்தைத் தொடர்ந்து, ஈழப்போராட்ட அமைப்புக்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்வது பற்றிய அச்சம் பரந்துபட்டரீதியில் ஈழமக்கள் மத்தியில் ஏற்பட்டது.

ஆனால் EPRLF, TELO, EROS ஆகியவற்றிற்கிடையில் 1984ம் ஆண்டு ஏற்பட்டிருந்த ஐக்கிய முன்னணியாகிய ஈழத் தேசிய விடுதலை முன்னணியோடு (ENLF) புலிகள் குழுவும் இணைந்து கொண்டபோது இயக்கங்களிற்கிடையிலான படுகொலைகள் இனித் தொடரமாட்டா என்பதுபோன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது.

ஈழமக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியும் நம்பிக்கைகளும் எதிர்பார்க்கைகளும் தோன்றின.



படிப்பகம்

www.padippakam.com

# தோழர்கள் றேகனும் அமீனும் படுகொலை

ஆனால், 1985 புரட்டாதியில் ரெலோவினருக்கும் புலிகள் குழுவிற்கும் இடையில் ஏற்பட்ட சிறு மோதலில் இருபக்கமும் மொத்தத்தில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

ஆனால், இரண்டு குழுக்களுக்குமிடையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியே பேச்சுவார்த்தைகள் நடத்தி, சமாதானமான நிலையை ஏற்படுத்தியது — ஈழத் தேசிய விடுதலை முன்னணி சிதைந்து போய்விடாமல் பாதுகாத்தது.

அதே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னிப் பிராந்தியத் தளபதி தோழர் றேகன் மீது 1985 கார்த்திகையில் புலிகள் தமது கோரப் பற்களைப் பதித்தன.

சில நாட்களுக்குள்ளேயே PLOT உறுப்பினர்கள் மூவரை யாழ்ப்பாணத்தில் வைத்துப் புலிகள் படுகொலை செய்தனர்.

இவ்வாறாக, குழுக்களினால்—பிரதானமாக புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட சகோதரப் படுகொலைகள் தொடருமானால், அது மக்களின் தியாகத்தில் வளர்ந்த ஈழவிடுதலைப் போராட்டத்தைச் சிதைத்துவிடும் என்று கருதிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது —

இவ்வாறான சகோதரப் படுகொலைகளை இரகசியமான பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டும் தடுத்து நிறுத்திவிட முடியாது என உணர்ந்து இக் கொலைகளுக்கு எதிராக மக்கள் அபிப்பிராயத்தை — எழுச்சியை உருவாக்கும் நடவடிக்கைகளில் இறங்கியது.

நெருப்புத் தினம் என்ற பெயரில் மக்கள் அபிப்பிராயத்தை — எழுச்சியைத் திரட்டி வெளிப்படுத்தியது.

ஆனால், புலிகளோ மக்கள் அபிப்பிராயத்தைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்படாமல், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சிறந்த தளபதிகளில் மற்றொருவரான தோழர் அமீனை நயவஞ்சகமாகப் படுகொலை செய்தனர்.

தோழர் அமீனைப் படுகொலை செய்தது தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மிகுந்த ஆத்திரம் கொள்ள நேரிட்டதாயினும் (அக்காலகட்டத்தில் புலிகள் அவ்வளவு பலமாக இருக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது)



படிப்பகம்

www.padippakam.com

ஈழப் போராட்டத்தில் ஒரு நெருக்கடி நிலைமை உருவாகிவிடா மல் தவிர்ப்பதற்காகப் புலிகளுடன் சமாதானமான முறையில் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டது.

## 'ரெலோ' - தாஸ் முரண்பாடு

1986ம் ஆண்டு பங்குனி மாதத்தில் 'ரெலோ'விற்குள் ஏற்பட்ட உள்முரண்பாடுகளினால் அதற்குள்ளிருந்து தாஸ் என்பவரின் தலைமையில் ஒரு குழு பிரிந்தது.

ரெலோவினர் யாழ்ப்பாண மருத்துவமனையில் வைத்து தாஸ் குழுவினர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதில் தாஸ் என்பவரும் அவரது குழுவைச் சேர்ந்த மேலும் சில உறுப்பினர்களும் கொல்லப்பட்டதுமல்லாமல், ரெலோவின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் பொதுமக்கள் சிலரும் கொல்லப்படவும் காயமடையவும் நேரிட்டது.

ரெலோவினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திற்கெதிராக மக்கள் திரண்டனர். கண்டன ஊர்வலம் நடத்தினர். மாணவர்கள் தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினர்.

மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஆத்திரம், வெறுப்பு நிலையைக் கருத்திற்கொண்டு ரெலோவானது பொறுமையுடன் மக்களுக்கு விடயங்களை எடுத்துச் சொல்லாமல், அதற்கு மாறாக மக்களோடு முரட்டுத்தனமாக நடந்துகொண்டது.

நல்லூரில் கண்டன ஊர்வலம் நடத்திய மக்கள் மீதும் ரெலோ கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இந்தத் தொடர் நிகழ்ச்சிகள் ரெலோ மீது மக்கள் வெறுப்புணர்வு கொள்ளும் நிலையை ஏற்படுத்தியது.

இந்தக் காலகட்டத்தில் சர்வதேச பிற்போக்குச் சக்திகள் ஆதரவினால் ஆயுதரீதியிலும் பணரீதியிலும் மிகவும் பலம் பொருந்தியிருந்த எல்.ரி.ரி.ஈ ஆனது ஏனைய இயக்கங்கள் மீது யுத்தம் தொடுப்பதற்கு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தது.

ரெலோ அதற்குரிய சந்தர்ப்பத்தை மிகச் 'சிறப்பாகவே' வழங்கியது.

ரெலோ மீதான யுத்தத்தைப் புலிகள் மிகவும் திட்டமிட்ட முறையில் நடத்தத் தயாரானினர்.



படிப்பகம்

www.padippakam.com

முதற்கட்டமாக, ரெலோ—தாஸ் முரண்பாட்டைப் பயன்படுத்தினர். தாஸ் குழுவினர் பெயரில் ரெலோ விற்கு எதிரான பிரச்சாரத்தைப் புலிகளே செய்தனர்,

இரண்டாவதாக ரெலோ மீது 'சமூகவிரோதிகள்' பட்டம் சூட்டுவதற்கு வகையாக மிகவும் இரகசியமான முறையில் ரெலோ வின் பெயரில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலும் கொள்ளையடித்தனர்.

மூன்றாவதாக, 1986 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ம் திகதி தொடக்கம் மே மாதம் 6 ம் திகதி வரை ரெலோ அமைப்பினர் மீது ஒரு திட்டமிட்ட திடீர்த் தாக்குதலை நடத்தினர்.

இதில் ரெலோ வின் தலைவர் சிறி சபாரத்தினம் உட்பட அவ்வமைப்பின் 250 க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் மிகவும் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

ரெலோ வினர் மேற்கொண்ட தற்காப்புத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 30 பேரளவில் புலிகள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இதுவரை புலிகள் அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

தமது திடீர்த் தாக்குதலால் ரெலோ வை நிலைகுலையச் செய்து சிரழித்த புலிகள் —

ரெலோவின் முகாம்களிலிருந்த பொருட்களையும் ரெலோ மீது அவதூறுப் பிரச்சாரம் செய்வதற்காகத் தாம் கொள்ளையடித்த பொருட்களையும் யாழ் நகர வீதிகளில் அடுக்கி வைத்து ரெலோ வினர் 'சமூகவிரோதிகள்' என்றும் கண்காட்சி நாடகம் நடத்தினர்.

புலிகளின் நாடகத்தைப் பற்றிப் பெரும்பான்மையான மக்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். எனினும் மக்கள் வாயைத் திறந்து தமது கருத்தைச் சொல்வதற்குத் தயாராக இருக்கவில்லை. புலிகளுக்குத் தமது எதிர்ப்பை மௌனமாக ஹர்த்தால் மூலம் தெரிவிப்பதற்கு மட்டுமே தயாராக இருந்தனர்.

## மக்களின் நம்பிக்கை மீது விழுந்த பேரிடி!

புலிகள் ரெலோ மீது நடத்திய யுத்தமானது ஈழமக்கள் மத்தியில், அவர்கள் ஈழத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கை மீது பேரிடியாகவே அமைந்தது.

ஆனால் —



படிப்பகம்

www.padippakam.com

புலிகளும், புலிகளின் ஆதரவாளர்களும் குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள ஆதரவாளர்களும் வெற்றிக் களிப்பில் மிதந்தனர்.

சிறிசபாரத்தினத்தைக் கொலை செய்து ரெலோவை அழித்ததற்காக எம்.ஜி.ஆர் (டி.ஐ.ஜி மோகன்தாஸ் ஆகியோரும்) அவரது வீடாகிய இராமாவரம் தோட்டத்தில் வைத்துப் பிரபாகரனுக்கு விருந்துபசாரக் கொண்டாட்டம் நடத்தினர். எம்.ஜி.ஆர் பிரபாகரனின் 'வீரத்தை'ப் பாராட்டி 5 கோடி ரூபா அன்பளிப்புச் செய்தார்.

ஈழமக்களுக்கும் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கும் எத்தனை விதமான துரோகத்தனங்கள் எங்கெங்கெல்லாம் மேற்கொள்ளப்பட்டன. என்ற உண்மைகளை வரலாறு ஒரு நாள் வெளியே கொண்டு வந்தே தீரும் என நம்பிக்கை கொள்வோம்.

புலிகள், அடுத்ததாக புளொட் குழுவினர்மீது பாய்ந்தன. அந்த நிகழ்ச்சி பெரும் பரபரப்பின்றி முடிந்தது.

அதைத் தொடர்ந்து புலிகள் எப்போது EPRLF மீது பாயப்போகின்றன? அதன் விளைவுகள் என்னவாக இருக்கப் போகின்றன? என்றே பலரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

## ஈ.பி.ஆர்.எல்.எப் உறுப்பினர்கள் மீது புலிகளின் பாய்ச்சல்!

ரெலோ வை, புளொட்டை அழித்து இராணுவரீதியில் தனது வல்லமையைப் புலிகள் வெளிப்படுத்திய போதிலும்—

அரசியல் ரீதியில் ஈ.பி.ஆர்.எல்,எப் இயங்கிக்கொண்டிருக்கிறவரை தனது தனி அதிகாரத்தை நிலைநாட்டுவது சிரமம் என்பதைப் புலிகள் கண்டுகொண்டன.

சகோதரப் படுகொலைகளுக்கு எதிராக ஈ.பி,ஆர்.எல்,எப் மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டியது,

ரெலோ மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிராக ஹர்த்தால் நடத்தி, மக்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியது.

சிதறிய ரெலோ உறுப்பினர்களுக்குப் புகலிடமளித்தது.

புளொட் மீது எல்.ரி,ரி.ஈ தாக்குதல் நடத்தியவேளையிலும் மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டியது — புளொட் உறுப்பினர்களுக்குப் புகலிடமளித்தது.



படிப்பகம்

www.padippakam.com

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனைப் புலிகள் கடத்திச் சென்று கொலை செய்ததற்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்திற்கு EPRLF மட்டுமே தனது முழு ஆதரவையும் நல்கியது.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான ஈ.பி.ஆர்.எல்.எப் இன் நடவடிக்கைகள் தனது தனிக்காட்டு ராஜாத்தனத்துக்குப் பெரும் சவாலாக அமைந்தமையினால் EPRLF மீது தாக்குதலுக்குப் புலிகள் திட்டமிட்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப் மீது சமூக விரோதிப் பட்டம் சூட்டுவது சாத்தியமாகாமையினால் 'EPRLF புலிகளைத் தாக்கத் திட்டமிட்டதாக' ஒரு காரணத்தைக் கற்பித்து EPRLF மீது 1986 மார்கழி 13ந் திகதி தாக்குதல் நடத்தியது.

ஈ.பி.ஆர்.எல்.எப் மீதான தாக்குதல் விடயத்திலும் LTTE யினர் டக்ளஸ் தேவானந்தா குழுவினர் EPRLFக்குள் ஏற்படுத்திய குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டுப் பொலிஸ் நிர்வாகம் புலிகளுக்கு முழு ஒத்துழைப்பும் கொடுத்தது.

1986 கார்த்திகை 1ந் திகதி சென்னையில் உள்ள சூளைமேடு என்னுமிடத்தில் தேவானந்தா குழுவினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னணியில் தமிழ் நாட்டுப் பொலிஸின் கையும், LTTEயும் இருந்ததை நன்கு கண்டுகொள்ள முடிகின்றது.

ஈழஇயக்கங்களிடமிருந்து ஆயுதப்பறிப்பு என்ற பெயரில் மோகன்தாஸ் நடத்திய நடவடிக்கைகளும் ஈ பி ஆர் எல் எப் மீதான புலிகளின் தாக்குதலுக்கு வசதிசெய்து கொடுக்குமுகமாகவே நடைபெற்றன எனக் கூற முடியும்.

புலிகள் ஈ பி ஆர் எல் எப் மீது தாக்குதல் நடத்திய நாட்களில் தமிழ் நாட்டுக் கரையோரம் முழுவதும் தமிழ்நாட்டுப் பொலிசாரின் சோதனைகள் மிகவும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

வடமாகாணத்தில் புலிகள் ஈ பி ஆர் எல் எப் மீது வெற்றிகரமான தாக்குதலை நடத்தமுடிந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் அவ்வாறு சாத்தியமாகவில்லை.

ஈ பி ஆர் எல் எப் — புலிகள் யுத்தம் அங்கு பலமாதங்கள் நீடித்தது.



படிப்பகம்

www.padippakam.com

1987 பங்குனி மாதம் 4ந் திகதி EPRLF மட்டக்களப்பு அம்பாறை பிராந்தியப் பொறுப்பாளர் தோழர் குமார் மக்கள் விடுதலைப் படைத் தளபதி தோழர் அருள் மற்றும் நவீனன், கமலன், ஜெயந்தன் ஆகியோர் STF படையினரால் கொல்லப்பட்டதன் பின்னரே.....

ஈபிஆர்எல்எப் இன் நடவடிக்கைகள் மிகவும் சிரமத்துக்குள்ளாயின.

புலிகளும் சரி, புலிகளின் ஆதரவாளர்களும் சரி, விடயங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் புலிகளின் கொலைகாரத்தனத்திற்கு ஆதரவளித்து வந்துள்ள நடுநிலையாளர்களும்சரி—

எவ்வளவுதூரம் இவர்கள் ஈழப்போராட்டத்திற்குத் துரோகம் செய்திருக்கிறார்கள்— சர்வதேசப் பிற்போக்குச் சக்திகளின் சதித்திட்டத்திற்குத் துணைபுரிந்து வந்திருக்கிறார்கள் என்பதை எதிர்காலம் தெளிவுபடுத்தும்.

★ புலிகள் நடத்திய சகோதரப் படுகொலைகளே ஈழப் போராட்ட இயக்கத்தைப் பலவீனப்படுத்தியது;

★ தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்பையும் விரக்தியையும் நம்பிக்கையீனத்தையும் வளர்த்தது;

★ ஈழப்போராட்ட இயக்கங்களிற்கிடையில் ஒற்றுமை ஏற்பட முடியாமல் பெரும் தடைக்கல்லாக அமைந்தது;

★ தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் இருந்த ஆதரவையும் அநுதாபத்தையும் இல்லாதொழித்தது;

★ வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் வழங்கி வந்த ஆதரவைக் குறைத்தது;

★ சர்வதேச முற்போக்குச் சக்திகளின் ஆதரவையும் பின்னடையச் செய்தது;

★ ஈழப்போராட்டத்தைச் சீர்குலையச் செய்தது மட்டுமல்லாமல், பேச்சுவார்த்தைகளில் கூட உறுதியாக இருக்க முடியாத நிலைமைகளைத் தோற்றுவித்தது;

★ இந்திய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் ஈழவிடுதலை இயக்கங்களைப் புறக்கணித்துவிட்டுச் செயற்படக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தியது;

முகாம்களில் அடைபட்டுக் கிடந்த சிறீலங்கா இராணுவம் ஈழத்து வீதிகளில் வெற்றி வலம் வரும் சூழ்நிலையை ஏற்படுத்தியது;



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் உணவுப் பார்சல்களுக்காக எமது மக்கள் அண்ணாந்து பார்த்து நிற்கும் நிலையைத் தோற்றுவித்தது.

தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் இந்தியப்படைகள் எமது தேசத்திற்கு வருவதற்கும், அப்படைகளை எமது மக்கள் பூரண கும்பங்கள், தோரணங்களுடன் வரவேற்கும் நிலைமைக்கும் உள்ளாக்கியது.

இறுதியில், இந்திய அரசாங்கத்தின் நட்பைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகள், அதிகாரம், பாதுகாப்பு, புனர்வாழ்வு, புனரமைப்பு, விடயங்களை முடிந்தளவு அதிகபட்சம் பெற்றுக் கொள்வதற்கு மாறாக—

சிறீலங்கா அரசாங்கம் ஒப்பந்த மீறல்களை—ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களைத் தள்ளிப் போடுவதை மேற்கொள்வதற்குச் சாதகமான நிலைமைகளைக் கொடுத்தது.

இவ்வாறு புலிகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள துரோகத்தனங்கள் யாவும் சகோதரப்படுகொலைகளையும் அதனோடு இணைத்த வகையிலேயே செயற்பட்டு வந்திருக்கின்றது..

## வெலிக்கடையை விஞ்சிய நல்லூர்ப் படுகொலை

1983 ம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து 53 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டபோது...

இந்த உலகம் முழுவதும் அந்த அரசியல் அநாகரிகத்தையும் காட்டுமிராண்டித்தனத்தையும் கண்டித்தது.

அந்தச் சம்பவம் கேட்டு ஈழத்தின் அனைத்துத் தமிழர் வீடுகளும் ஓலமிட்டன.

தமிழகம் கொதித்தெழுந்தது.

அந்தப் படுகொலைகளே ஈழத்து இளைஞர்களை விடுதலை உணர்ச்சி கொள்ள வைத்துப் போர்க்களம் நோக்கி அனுப்பி வைத்தது.

'மறியல் கைதிகளுக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 53 பேர் இறந்து போனார்கள்' என்று சிறீலங்கா அரசாங்கம் மிக இலகுவான முறையில் விளக்கமளித்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் —

அதையும் விஞ்சிய ஒரு கொடூரம் யாழ்—நல்லூரில் 1987ம் ஆண்டு பங்குனி மாதம் 30ந் திகதி புலிகளினால் நடத்திமுடிக் கப்பட்டது.

ஏனைய இயக்கங்கள் மீது தான் நடத்திய யுத்தத்தில் கொன்றவர்கள் போக மிகுதியாக இருந்த சுமார் 60 பேரை நல்லூரில் இருந்த தமது சித்திரவதை முகாமில் கைதிகளாக அடைத்து வைத்திருந்தனர்.

மேற்குறிப்பிட்ட திகதியன்று பகல்வேளை புலிகளின் யாழ்ப் பாணத் தலைவன் கிட்டுவுக்கு யாரோ கைக்குண்டு எறிந்தார் கள் என்ற காரணத்தின் பேரில் கைதிகளாக இருந்த போரா ளிகளின் மீது புலிகள் தமது இரத்த வெறியைக் கட்டவிழ்த்து விட்டன.

57போராளிகள் ஒரு சில நிமிடநேரங்களுக்குள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியவன் அருணா எனப் படும் பிரபாகரனின் கையாள்.

கிட்டுவிற்குக் கைக்குண்டெறிந்தவனும் இம்ரான் என அழைக்கப்படும் பிரபாகரனின் கையாளே.

இந்த அருணாவும் இம்ரானும் பின்னாளில் இந்தியப்படை யினால் கொல்லப்பட்டு விட்டார்கள்.

நல்லூர்ப் படுகொலைகள் பற்றித் தெரிவித்த புலிகளின் தலைமைப் பீடம் ''கைதிகளாயிருந்த சமூக விரோதிகள் காவலி லிருந்த புலிகளின் கைகளிலிருந்து ஆயுதங்களைப் பறிக்க முற் பட்டதால் ஏற்பட்ட மோதலில் 18 பேர் கொல்லப்பட்டனர்'' என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டது.

இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலைகளை நியா யப்படுத்தும் பொருட்டு அத்துலத்முதலி விடுத்த அறிக்கை களுக்கும் இதற்கும் என்ன அடிப்படை வேறுபாடு?

கிட்டுவின் மீது கைக்குண்டு எறிந்தவன் இம்ரான்தான் என்பதை அந்தக்கண நேரமே யாழ்ப்பாணத்தில் இருந்த புலி களுக்கும் தெரியும்.

எனவே நல்லூர்ப் படுகொலைகள் கிட்டுவிற்குக் கால்போன தால் ஏற்பட்ட ஆத்திரத்தின் விளைவு என்றுகூற முடியாது.

அருணாவும் இம்ரானும் பிரபாகரனின் கையாட்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கிட்டுவைச் கொலை செய்ய முயற்சித்ததும் அதே நேரத்தில் ஏனைய இயக்கப் போராளிகளைப் படுகொலை செய்த விடயமும் ஒரே நேரத்தில் செய்வதற்காக பிரபாகரனாலும் அவன் கையாட்களினாலும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை என்பது மிகவும் தெளிவாகும்.

அருணாவை யாழ்ப்பாணப் பொறுப்பாளராக்கி விட்டு மன்னாருக்குப் போகும்படி கிட்டுவுக்குப் பிரபாகரன் அனுப்பிய உத்தரவை கிட்டு ஏற்றுக் கொள்ளவில்லை!

இதுவே கிட்டுவின் மீதான கொலை முயற்சிக்குக் காரணம் எனப்படுகிறது.

இதேவேளை —

கைது செய்து வைத்திருந்த போராளிகளைக் கொலை செய்து முடித்து விடுவதற்கான காரணத்தையும் அந்தக் கொலை முயற்சியிலேயே கண்டு கொண்டார்கள்.

கைது செய்யப்பட்டிருந்த போராளிகளை இரகசியமாகக் கொலை செய்து விடுவதற்குப் புலிகளுக்கு நிறைய வாய்ப்புக்கள் இருந்தனதானே எனப் பலர் கேள்வி எழுப்பக் கூடும்.

பயங்கரவாதத்தில் உள்ள பிரதான தந்திரங்களில் ஒன்று நியாயத்தைக் காட்டியபடி பகிரங்கமாகவும் கொடூரமாகவும் கொலை செய்தல் என்பது ஆகும்.

தாங்கள் நியாயமானவர்கள் என்றும் காட்டவேண்டும் அதே வேளை மக்கள் மத்தியில் கிலியையும் ஏற்படுத்த வேண்டும். இதற்கான பயங்கரவாத முறையையே புலிகள் மேற்கொண்டார்கள்,

கைதிகளாய், நிராயுத பாணிகளாய் அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளை மட்டுமல்லாமல் யாழ் மாவட்டத்தின் பல்வேறுபாகங்களிலும் அன்றைக்குப் புலிகள் ஏனைய இயக்கப் போராளிகளைக் கொலைகள் புரிந்து திரிந்தனர்,

ஒரே நாளில் எல்லாமாக நூற்றுக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலைகள் தொடர்பாக இங்குள்ள பிரதான விடயம் என்னவெனில் சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச நீதிமன்றம் ஆகியவற்றிற்கு இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள்பற்றி அறிக்கைகள் அனுப்பும், குரல் எழுப்பும் பிரமுகர்கள்—



படிப்பகம்

www.padippakam.com

1500க்கும் மேற்பட்ட போராளிகளும் 2000 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்ப் பொது மக்களும் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டும் கூட இன்னும் மௌனமாக இருக்கிறார்கள்.

இந்த மனித உரிமைப் பிரமுகர்கள் அனைவரும் பயத்தினால்தான் மௌனமாக இருக்கிறார்கள் என்று கூறமுடியாது.

ஒரு பகுதி பிரமுகர்கள் வெளிப்படையாகவும் இன்னொரு பகுதி பிரமுகர்கள் மறைமுகமாகவும் இப்படுகொலைகளின் ஆதரவாளர்களாக இருந்து வருகின்றனர் என்பதுவும் இங்கு கவனத்திற்குரியது.

## ஹிட்லர் இன்னும் சாகவில்லை!

ஈழவிடுதலை என்ற கோஷம் எந்த காலகட்டத்தில் தோன்றிவளர்ந்ததோ, அதனோடு கூடவே பிறந்த நோய் போல சகோதரப் படுகொலைகளும் ஈழவரலாற்றில் வருந்து வளர்ந்து வந்துள்ளன.

அதிலும் பிரபாகரன், உமாமகேஸ்வரன் போன்ற நபர்கள் தலைமை, அதிகாரம், புகழ், சந்தேகம் என்பவற்றிற்காக சகோதரப் படுகொலைகளை மேற்கொள்வதில் வெறிபிடித்த உளவியல் நோயாளிகளாகவே ஆகி விட்டனர்.

ஹிட்லர், முசோலினி போன்றோர் இறந்து விட்டபோதிலும் அந்தக் குணாம்சங்கள் இந்த உலகில் இருந்து மறைந்து போகவில்லை. மாபியாக்கள் வடிவிலும் பயங்கரவாத அரசியல் குழுக்கள் வடிவிலும் செயற்பட்டு வருகின்றன.

ஈழவிடுதலைக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் இந்தக் கொலை வெறி நோய் பிடித்த, தலைமை—அதிகார ஆசை பிடித்த குழுக்களை நன்கு பயன்படுத்தி, ஈழப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தியுள்ளன.

ஓர் இலட்சியப் போராடடத்தைப் பலவீனப்படுத்தியது மட்டுமல்லாமல் தொடர்ந்தும் தமிழ் மக்களை அது எல்லா வடிவத்திலும் பலவீனப்படுத்தியே வருகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பிரச்சார வெளியீட்டுப் பிரிவு

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

படிப்பகம்